# VDNKh இல் உள்ள ரோசாட்டம் பெவிலியனுக்கு பிரதமரின் வருகை

ஜூலை 09, 2024

இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உடன் ஜனாதிபதி மாண்புமிகு திரு. விளாடிமிர் புதின் அவர்களும் மாஸ்கோவில் உள்ள அனைத்து ரஷ்ய கண்காட்சி மையமான VDNKh க்கு சென்றார்.

2. இரு தலைவர்களும் VDNKh இல் உள்ள ரோசாட்டம் பெவிலியனை பார்வையிட்டனர். ரோசாட்டம் பெவிலியன், நவம்பர் 2023 இல் திறக்கப்பட்டது. இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் வரலாற்றில் மிகப்பெரிய கண்காட்சிகளில் ஒன்றாகும். சிவில் அணுசக்தி துறையில் இந்தியா-ரஷ்யா ஒத்துழைப்புக்காக அர்ப்பணிக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை பிரதமர் பார்வையிட்டார். இந்தியாவின் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் (KKNPP) இதயமான VVER-1000 அணு உலையின் நிரந்தர செயல்பாட்டு மாதிரியான "அணு சிம்பொனி" (Atomic Symphony) யையும் பிரதமர் மோடிக்கு காண்பிக்கப்பட்டது.

3. பெவிலியனில், இந்திய மற்றும் ரஷ்ய மாணவர்களின் குழுவுடன் பிரதமர் கலந்துரையாடினார். எதிர்கால சந்ததியினரின் நலனுக்காகவும், இந்த கிரகத்திற்க்கு பயன்படுத்தக்கூடிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் எதிர்கால சாத்தியக்கூறுகளைப் ஆராயும்படி அவர் மாணவர்களை ஊக்குவித்தார்.

**மாஸ்கோ**
**ஜூலை 09, 2024**